# <u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்</u>

அசல் வழக்கு எண்.249/2020

நாள்: 06.08.2026

பி.வா.சா. 2– அரும்பு

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 06–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை 4ம் பிரதிவாதி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. இறந்துபோன 1ம் பிரதிவாதியை தெரியும். சுமார் 10, 15 வருடங்களாக தங்கவேலிடம் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1–ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பி.வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னை 4ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து போடச் சொன்னாரா என்றால் இல்லை. நான் அங்கு இருந்ததால் சாட்சி கையொப்பம் போட்டேன். என் கணவர் பெயர் மாயவேல். என் கணவர் இறந்து 2 வருடங்கள் ஆகிறது. என்னுடைய வீட்டின் வரவு செலவு கணக்கை என் கணவர் உயிருடன் இருந்தவரை அவர் தான் பார்த்தார் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான இடம் பற்றி எனக்கு தெரியும். அந்த சொத்தில் நான் தான் விவசாயம் செய்து வருகிறேன். அந்த போர்வெல்லில் இருந்து தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகிறேன் என்றால் அந்த போர்வெல் பழுதானதில் இருந்து சரியாக விவசாயம் செய்யவில்லை. அந்த போர்வெல் நல்ல நிலையில் உள்ளது என்றாலும் அதில் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

அந்த போர்வெல்லை சரி செய்து விவசாயம் செய்து வருகிறேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வாதி நல்ல நிலையில் தான் சொத்தை தங்கவேலிடம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. போர்வெல்லையும் நல்ல நிலையில் தான் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. போர்வெல்லை வீணாக்கிவிட்டார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் வாதி உண்மைகளை மறைத்து 1ம் பிரதிவாதியிடம் போக்கிய பணத்தை கேட்டார் என்றும் 1ம் பிரதிவாதி கிணற்றை ஆய்வு செய்தபோது ஆழ்துளை கிணறு சேதப்படுத்திய விவரம் 1ம் பிரதிவாதிக்கு தெரியவந்தது என்றும் அதற்கான முழுத்தொகையை வாதியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று 1ம் பிரதிவாதி கூறினார் என்றும் நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிகளிடம் நெடுஞ்சேரியைச் சேர்ந்த சிவக்குமார், பன்னீர் மற்றும் ஸ்ரீராமன் கிராத்தைச் சேர்ந்த தர்மராஜ் மற்றும் சில முக்கியஸ்தர்களை அழைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது என்றும் ஆழ்துளை கிணற்றை வாதி சொந்த செலவில் சரி செய்து கொடுக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அதற்கான தொகையை போக்கிய பணத்தில் கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றும் என்னுடைய முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் ரூ.4 லட்சம் முடிவு செய்து வாதி 2 லட்சமும், பிரதிவாதிகள் 2 லட்சமும் ஏற்றுக்கொண்டதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. போக்கியத் தொகை ரூ.6 லட்சத்தில் ஆழ்துளை சேதப்படுத்திற்கான ரூ.2 லட்சம் போக பாக்கி ரூ.4 லட்சத்தில் ரூ.2 லட்சத்து 55 ஆயித்தை பிரதிவாதிகள் வாதியிடம் கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள சிவக்குமார் அலுவலகத்தில் வைத்து ரூ.2,55,000/-யை ஆனந்த பாபு வாதியிடம் கொடுத்தார். மீதமுள்ள ரூ.1,45,000/-யை போன் மூலம்

4ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பினார். நான் சொல்வதுபோல் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சிவக்குமார் அலுவலகத்தில் வைத்து சிவராமனுக்கு பணம் கொடுத்தார்கள். சிவக்குமார் அலுவலகத்தில் வைத்து பணம் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லாததை தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதிகள் முழுதொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போக்கிய ஆவணத்தை எடுத்துவரவில்லை என்று 24.02.2020ஆம் தேதி வாதி சொன்னதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1–ல் உள்ளது வாதியின் கையொப்பம் இல்லை என்றாலும் அது எங்களால் வழக்கிற்காக போர்ஜரியாக போடப்பட்டது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது மகன் தமிழ்வேல் எழுதியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் முன்னிலையிலோ சாட்சிகள் முன்னிலையிலோ வாதி 4ம் பிரதிவாதியிடம் எந்த பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அதற்காக எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் பிரதிவாதி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V.பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.